**தலைப்பு 203 – கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 203 – கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 01/2023 என்ற வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 6 சதவீதத்திற்கு சமமான நிதிஏற்பாடு பதிவழிக்கப்பட்ட பின்னர் 05 செலவின விடயங்களுக்குரியதாக 60 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடையிலான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமையால் சாத்தியமான முறையில் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சிக்கனமாக செலவினங்களைச் செய்தல், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படாமை மற்றும் அறநெறிப் பாடசாலைகள் குறிப்பிட்ட காலத்தில் நடாத்தப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முன்னுரிமைத் தேவையின் பிரகாரம் மதிப்பீடுகளைத் தயாரித்து நிதியேற்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருதமடு தேவாலயத்தின் சுற்றுலா விடுதி ஒன்று 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2.5 மில்லியன் செலவிடப்பட்டு கட்டிடத்தின் தரைப்பகுதி மற்றும் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் பாதீட்டின் மூலம் கிடைத்த ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரியதாக இதுவரையில் மன்னார் மாவட்ட செயலகத்தால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்தல் தொடர்பில் கவணம் செலுத்துதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 2006 ஆம் ஆண்டின் போது கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட தலவில சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் உரித்தை கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணியை திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு கற்பிட்டி பிரதேச செயலாளரால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய காணியின் உரித்தைக் கையேற்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்துக்குரிய 2019 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டிருந்த வாகனத்திற்குரிய ரூபா 137,707 நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விபத்துக்குரிய ரூபா 137,707 தொகை செலுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களம் மூலம் ஏனைய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்டமையினால் சட்டமா அதிபரால் | நட்டத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடரப்பட்டுள்ள வழக்கு தற்போது விசாரணையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு படிகள், சீருடைகள் போன்ற அனுசரணைகளை வழங்கும் போது பதிவு செய்தல் தொடர்பாக கவணத்தில் கொள்ளவேண்டியிருந்த போதிலும் காணப்பட்ட கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மத நிலையங்களில் பதிவு செய்தல் முறையான திட்ட முறைமையொன்று காணப்படாதிருந்தமை அது தொடர்பாக உரிய ஆலயங்கள் மற்றும் மத ஸ்தலங்களைப் பதிவு செய்வதற்காக வரைவு செய்யப்பட்ட சட்டம் அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கத்தோலிக்க தேவாலயங்கள் பதிவு செய்தல் அநேகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் புதிய பதிவுகளில் காணப்பட்ட திட்ட முறைமையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மத ஸ்தலங்களை பதிவு செய்வதற்கு திட்டமுறைமை ஒன்று காணப்படாததுடன் வரைவு செய்யப்பட்டுள்ள சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு உள்ள பிரச்சனையான நிலைமையினால் அமைச்சினால் இருதரப்புக் குழு ஒன்றின் மூலம் பதிவு செய்யும் திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்படுகின்றது. அதற்காக தேவையான விண்ணப்பம் மற்றும் நிபந்தனைகள் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்தவுடன் பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | விரைவாக மறுசீரமைப்புச் செய்யப்படவேண்டிய தொல்பொருளியல் பெறுமதியுடைய தேவாலயங்களை மறுசீரமைக்கும் போது தொல்பொருளில் திணைக்களத்தின் அங்கீகாரம், மேற்பார்வை | தொல்பொருளியல் பெறுமதியுடைய விரைவாக மறுசீரமைக்கப்பட வேண்டிய செயற்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டின் போது தொல்பொருளியல் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டு வரை அந்த திணைக்களத்தின் பெயருக்கோ | தொல்பொருளியல் பெறுமதியுடைய தேவாலயங்களை மறுசீரமைக்கும் போது தொல்பொருளியல் திணைக்களத்தின் |

| | | |
|---|---|---|
| மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக தேவாலயங்களுக்கு மீளாவாண்டின் போது ரூபா 2,940,728 நிதியுதவி வழங்கப்பட்டிருந்த போதிலும் சில தேவாலயங்களின் ஒவ்வொரு பணிகளுக்கும் உரிய மதிப்பீடு, ஒப்பந்த உடன்படிக்கை, அளவிடைப் பத்திரங்கள் மற்றும் வேலை பூர்த்தி செய்யும் சான்றிதழ் போன்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அல்லது முறைப்பாடோ காணப்படாமை மற்றும் கட்டிடம் மிகவும் பழையதாக விரைவாக மறுசீரமைப்புக்கு உட்படுத்த வேண்டியருந்தமையானது எழுத்து மூலம் அங்கீகாரம் கிடைக்கும் வரை காத்திருக்காமல் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுகின்ற தொல்பொருள் பெறுமதியுடைய சகல செயற்திட்டங்களுக்காகவும் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரம் நிதியேற்பாடு விடுவிக்கப்படுகின்றது. மேலும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மாவட்ட செயலகங்களுக்கு நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டு பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமை உரிய ஆவணங்கள் மாவட்ட செயலகம் / பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட போதிலும் கிடைக்காதிருந்த சந்தர்ப்பங்கள் உள்ளது. எனினும் வேலை முடிவடைந்துள்ள சகல செயற்திட்டங்கள் ஒரு வருடம் வரையான காலத்தில் ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு தடவை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் களப்பரிசோதனை மேற்கொண்டு பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரம், மேற்பார்வை மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக நிதியேற்பாடு விடுவிக்கப்பட்ட பின்னர் அதற்குரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 134(2) மற்றும் 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01/2019 என்ற முகாமைத்துக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் ஆலோசனை செய்து தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டுக்குரிய உள்ளக் கணக்காய்வுத் திட்டத்திற்காக கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றுகின்ற 05 வருடங்களை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தருக்கு ஏனைய சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 05 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையிலான காலத்தை பூர்த்தி செய்துள்ள 33 உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இடமாற்றல் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் தரங்கள் மற்றும் இடமாற்றங்களை கோருகின்ற உத்தியோகத்தர்களின் தரங்கள் பரிந்துரை செய்யப்பட்டு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுவதுடன் உத்தியோகர்களுக்கு இடமாற்றம் வழங்குதல் இந்தத் திணைக்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நடவடிக்கையாக உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிர்வாக அமைச்சுடன் தொடர்பினை ஏற்படுத்தி நீண்ட காலம் முதல் நிறுவனத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக் காக இடமாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |